மாற்றுதலுக்கு ஆளாகின்றவர்கள் அல்லது சிறுபான்மை மொழியோ வட்டார மொழியோ தங்கள் தாய்மொழியாக இல்லாதவர்கள் பயிலுகின்ற அவசியம் உடையவர்கள் குறிப்பிட்ட அளவில் எண்ணிக்கை உடையவர்களாக இருந்தால் ஆங்கில மொழிக்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஆகவே, காரணங்களைச் சொல்லி, அப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருந்தால் விண்ணப்பித்து அதற்கான அனுமதியைப் பள்ளிக் கல்வி இயக்குநரிடத்தில் பெறலாம்.

Purchase of medicines in Hospitals

* 828 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to revise the system of purchase of medicines by the Government Hospitals in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) இம் மாநில அரசு மருத்துவ நிறுவனங்களுக்குத் தேவைப்படும் மருந்துகள் வாங்குவதற்கு, நிதித் துறையைச் சேர்ந்த அமைப்பு—செயல் வகைக் குழுவின் (Organisation and Method Cell) பரிவுரைகளின் அடிப்படையில் மத்திய கொள்முதல் அமைப்பு ஒன்றை அமைக்க 1971-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அரசால் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. என். டென்னிஸ்: இப்போது பல மருத்துவ மனைகளில் உடனே மருந்துகள் கிடைக்காமல் காலதாமதம் ஏற்படுகிறது. அப்-டு-டேட் மருந்துகள் காலதாமதம் இல்லாமல் கிடைக்க அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நடைமுறைக் கொள்கையின்படி சென்னையிலுள்ள மெடிகல் ஸ்டோர்ஸ் என்ற அந்த அமைப்பில் இருந்து பொதுவாக மருந்துகள் வரவழைக்க வேண்டுமென்ற முறை இதுவரை இருந்து வருகிறது. அப்படி வரவழைக்க வேண்டுமென்ற முறையில் காலதாமதம் ஆகிறது என்று பல்வேறு இடங்களில் இருந்து தெரிவிக்கிறார்கள். ஆனால், இன்றியமையாத தேவையை நிறைவேற்ற உடனடியாகக் கிடைக்காத மருந்துகளைப் பெற மருத்துவ அதிகாரிகள் நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் அந்தந்த இடங்களிலேயே வாங்கிக் கொள்ளலாம் என்று அனுமதி இருக்கிறது. முறைப்படி முயற்சித்து முடியாதபோது அப்படி வாங்கிக் கொள்ளலாம்,

1974 ஏப்ரல் 15]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மருந்து வாங்குவதில் இதுவரை பின் பற்றப்பட்டு வந்த நடைமுறையை மாற்றக் காரணம் என்ன? தற்போது அது நடைமுறைக்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மெடிகல் ஸ்டோர்ஸ் என்ற அந்த நிறுவனம் சென்னையிலிருந்து பல பேருடைய வேண்டுகோளைக் குறித்த காலத்தில் நிறைவேற்றவில்லை என்று பல முறை மாவட்ட மருத்துவ அதிகாரி களாலும் அல்லது மருத்துவ மனை நிர்வாகப் பொறுப்பிலுள்ளவர்களாலும் தெரிவிக்கப்பட்டு வந்திருக்கிறது. அப்படி அவர்கள் அனுப்பியும்கூட சிக்கனமாக இல்லையென்ற கருத்தும் இருந்து வருகிறது. சிக்கனப்படுத்தவும், மருந்துகள் மருத்துவ மனைக்குத் தேவையான காலத்தில் உடனுக்குடன் வழங்கவும் தமிழக அரசு மத்திய நிலையம் ஒன்றை ஏற்படுத்தி அதன்மூலம் மருந்துகளை வழங்கலாமா என்ற கருத்தும் ஆய்வில் மேற்கொள்ளப்பட்டது. அப்படி வாங்கும்போது வாங்குகின்ற முறையில்கூட ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக ஒப்ப அறிவிப்பு கேட்காமல் குறிப்பிட்ட விலை தீர்மானிக்கப்பட்டு அந்த விலை அடிப்படையில் நேரடியாக வாங்கிக் கொள்ளச் செய்ய வேண்டு மென்ற விரிவான ஆலோசனைக் கருத்து அடிப்படையில் நடைமுறைப் படுத்த விரும்பினோம். சட்ட சிக்கல் காரணமாகத் தாமதம் ஆகிறது. இறுதியாக இந்தக் குறிக்கோள் நிறைவேற்றப்படும் என்று நம்புகிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : பொதுவாகவே மருந்துகளில் கலப்படம் செய்வ தாகப் பேசிக் கொள்ளப்படுகிறது. இப்படிக் கலப்படம் செய்கிற நிலைமை இருக்கும் காரணத்தால் முக்கியமாகப் பயன்படுத்துகிற மருந்துகளைப் பரிசோதனைச் சாலைகளில் பரிசோதனை செய்துவிட்டு பின்னர் பொது மக்களுக்குப் பயன்படுத்துகிற அளவுக்கு அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருந்துகள் எல்லாம் கலப்படமாகிறது என்ற கருத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை. நூற்றில் 99—அதுகூட அல்ல— 1,000-ல் 999 அளவு மருந்துகள் கலப்படமாவதில்லை. ஒன்றிரண்டு மருந்துகள் தரத்தில் குறைந்ததாக ஆகிவிடுகிறது. ஒன்றிரண்டு மருந்துகள் வரையறுக்கப் பட்ட கால எல்லையைக் கடந்து சில கடைகளில் விற்கப்பட்டு விடுகின்றன. அவைகளைக் குறித்து அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த முறையில் மருந்துகளில் எப்போதாவது ஏற்படும் கலப்படத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மற்றப்படி கலப்படம் செய்ய இடம் இல்லை.